# வாரம் 3

# அமர்வு 03

All Rights Reserved © 2023
Verité Research

# அரச வருமானம்

All Rights Reserved © 2023
Verité Research

## கலந்துரையாடலுக்கான பகுதிகள்

***1. அரச வருமானம் தொடர்பான மேற்பார்வை***

*1.1 வருமானத்தின் கூறுகள்*

*1.2 கடந்த கால வருமானப் போக்குகள்*

*1.3 நாடுகளுக்கு இடையிலான ஒப்பீடு*

***2. வருமானத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள்***

***3. 2023 EFF கீழான வருமானக் கடமைப்பாடுகள்***

All Rights Reserved © 2023
Verité Research

# 1.1வருமானத்தின் கூறுகள்

All Rights Reserved © 2023
Verité Research

# நேரடி மற்றும் மறைமுக வரிகள் என்றால் என்ன?

## நேரடி வரிகள்

- தனிநபர் அல்லது நிறுவனம் மீது நேரடியாக அறவிடப்படும் வரிகள், இவை வருமானம், செல்வம் போன்றவற்றின் அடிப்படையில் இருக்கலாம்
- நேரடி வரிகளுக்கான உதாரணங்கள் : தனிநபர் வருமான வரி, கூட்டிணைவு வரி, வட்டி வருமானம் மீதான வரி, பங்குடமை வருமான வரி, மூலதன ஈட்டுகை வரி

## மறைமுக வரி

- பொதுவாக ஒரு நிறுவனம் (உற்பத்தியாளர், சில்லறை விற்பனையாளர், இறக்குமதியாளர்) மீது விதிக்கப்படும் வரி மற்றொரு நிறுவனம் மீது கடத்தப்படுகிறது (நுகர்வோர்)
- மறைமுக வரிகளுக்கான உதாரணங்கள் - *VAT* , கலால், சுங்கத் தீர்வைகள் , *SCL* , *CESS* , *PAL*

**முன்னேற்றகரமான வரி: அதிக அளவிலான பணத்தின் மீது வரி விகிதம் அதிகமாக இருக்கும் வரி**

**பிற்போக்கான வரி: பணக்காரர்களை விட ஏழைகள் தங்கள் வருமானத்தில் அதிக விகிதத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் வரி**

நேரடி வரிகள் சமத்துவக் கண்ணோட்டத்தில் பொதுவாக முன்னேற்றகரமானதாகக் கருதப்படுகிறது

எனினும் சில மறைமுக வரிகளும் சமத்துவத்தை ஊக்குவிக்கலாம். உதாரணம், ஆடம்பர வாகனங்கள் அல்லது ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிகள்

All Rights Reserved © 2023

# இலங்கையின் வரி வருமானத்தில் மறைமுக வரி சராசரியாக 81 சதவீதமாக உள்ளது




*மூலம்: நிதி அமைச்சு ஆண்டறிக்கைகள்*

*குறிப்பு: நேரடி வரியில் வருமானம் மீதான வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன, அதேவேளை மறைமுக வரிகளில் வருமானம்/இலாபங்கள் மீதான வரிகள் தவிர்த்த அனைத்து வரிகளும் அடங்கும்.*

© 2022 Verité Research.
All Rights Reserved.

# 2023 ஆம் ஆண்டில் வரி வருமானம் 4 சதவீதத்தால் மட்டுமே அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது




மூலம்: 2023 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் | இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022

All Rights Reserved © 2023
Verité Research

# வரிகளின் வகைகள்

நேரடி வரிகள்

மறைமுக வரிகள்

## இலாபம் மற்றும் வருமானம் மீதான வரிகள்

- தனிநபர் வருமான வரி
- கூட்டிணைவு வரி
- நிறுத்திவைத்தல் வரி
- பொருளாதார சேவைக் கட்டணம்
- மூலதன ஈட்டுகை வரி

மொத்தம் *(2022) : ரூ 559.3* பில்லியன்
வரி வருமானத்தில் *31.9%*

## சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்

- இறக்குமதித் தீர்வை
- ஏற்றுமதித் தீர்வை
- துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
- செஸ் தீர்வை
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்கள் கட்டணம்

மொத்தம் *(2022) : ரூ 303.9* பில்லியன்
வரி வருமானத்தில் *17.4%*

## உரிம வரிகள் மற்றும் ஏனையவை

- ஆடம்பர மோட்டார் வாகன வரி
- பந்தயம் மற்றும் சூதாட்ட வரி

மொத்தம் *(2022) : ரூ 6.6* பில்லியன்
வரி வருமானத்தில் *0.4%*

## பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்

- பெறுமதி சேர் வரி
- கலால் வரி
- விசேட வியாபாரப் பண்ட அறவீடு
- புகையிலை வரி
- சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி

மொத்தம் *(2022) : ரூ 881.5* பில்லியன்
வரி வருமானத்தில் *50.3%*

மூலம் : நிதி அமைச்சு *2022*

All Rights Reserved © 2023
Verité Research

# இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வரிகள் வரி வருமானத்திற்கு அதிக பங்களித்துள்ளன




மூலம்: நிதி அமைச்சு ஆண்டறிக்கைகள்

All Rights Reserved © 2023
Verité Research

# கூட்டிணைவு வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரியில் ஏற்பட்ட அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 67 சதவீதத்திற்குப் பங்களித்துள்ளன







மூலம் : இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை (2022)

All Rights Reserved © 2023
Verité Research

# 1.2 வருமானப் போக்குகள்

All Rights Reserved © 2023
Verité Research

# 2015 – 2023 இடைப்பட்ட காலப்பகுதியில் செலவினம் 3.5 ட்ரில்லியனால் அதிகரித்துள்ளது, அதேவேளை வருமானம் 1.9 ட்ரில்லியனால் மட்டுமே அதிகரித்துள்ளது

*பெறுமதிகள் ரூ. பில்லியனில்*




மூலம்: ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023 | இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022

© 2023 Verité Research.
All Rights Reserved.

# 2016 முதல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமானம் குறைந்துள்ளது




மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2022) | ஒப்புதல் அளிக்கப்பட்ட 2023 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்

© 2023 Verité Research.
All Rights Reserved.

# இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வரி வருமானங்கள் வரி வருமானத்தில் சராசரியாக 40 – 50% பங்களிப்புச் செய்துள்ளன, முதல் முறையாக 2022 ஆம் ஆண்டில் இது 34 சதவீதமாகக் குறைந்துள்ளது




மூலம்: நிதி அமைச்சு ஆண்டறிக்கைகள்

All Rights Reserved © 2023
Verité Research

# 1.3 நாடுகளுக்கு இடையிலான ஒப்பீடு

All Rights Reserved © 2023
Verité Research

# மொ.உ.உற்பத்தியில் இலங்கையின் வருமானம் பிராந்தியத்திலேயே மிகக் குறைவு

***மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமானம் (2012 – 2021 வரையான 10 ஆண்டு கால சராசரி அடிப்படையில்)***




நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகளுக்கான உலக வங்கி தரவை அடிப்படையாகக் கொண்டது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 10 ஆண்டு *(2012 – 2021)* சராசரி வருமானம் = *17.26 %**

*மூலம்: பன்னாட்டு நாணய நிதியம், உலகப் பொருளாதார தரவு தளம், ஏப்ரல் 2023

*குறிப்பு: அனைத்து 9 நாடுகளின் சராசரி பெறுமதியைக் குறிக்கிறது

All Rights Reserved © 2023
Verité Research

# பொதுவாக அநேகமான தெற்காசிய நாடுகளில் மொ.உ.உற்பத்தியில் வரி வருமானத்தின் பங்கு தனிநபர் மொ.உ.உற்பத்தியுடன் அதிகரிக்கிறது




மூலம்: உலக வங்கி தரவு

All Rights Reserved © 2023
Verité Research

# ஆனால் இலங்கையில் அதிகரிக்கும் தனிநபர் மொ.உ.உற்பத்தியுடன், மொ.உ.உற்பத்தியில் வரி வருமானத்தின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது

## இலங்கை




மூலம்: உலக வங்கி தரவு | மத்திய வங்கி ஆண்டறிக்கை

All Rights Reserved © 2023
Verité Research

# இலங்கையை விடக் குறைவான தனிநபர் மொ.உ.உற்பத்தியைக் கொண்ட நாடுகள் 2021 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியில் அதிக வருமானத்தைக் கொண்டிருந்தன

## பல்வேறு நாடுகளின் 2021 ஆம் ஆண்டுக்கான, தனிநபர் வருமானத்திற்கு எதிராக மொ.உ.உற்பத்தியில் வருமானத்தைக் கண்டறிதல்




All Rights Reserved © 2023
Verité Research

மூலம் : பன்னாட்டு நாணய நிதியம், உலகப் பொருளாதார தரவுதளம், ஏப்ரல் 2023

# 2. வருமானத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள்

*2.1 தவறான மதிப்பீடு*

*2.2 வரி தொடர்பான பிரச்சினைகள்*

*2.2.1 வரியில் அடிக்கடி செய்யப்படும் மாற்றங்கள்*

*2.2.2 வரி அடிப்படை குறைதல்*

*2.2.3 அதிகளவான வரிச் சலுகைகள்*

# கடந்த 17 ஆண்டுகளாக இலங்கை அதன் வருமான இலக்குகளைத் எட்டத் தவறிவிட்டது

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக




மூலம்: வரவு செலவுத் திட்ட உரைகளின் பல்வேறு பதிப்புகள்

All Rights Reserved © 2023
Verité Research

# பன்னாட்டு நாணய நிதியத்தின் வருமான இலக்குகள் பன்னிரண்டில் 3 தடவைகள் மட்டுமே எட்டப்பட்டுள்ளன

## உண்மையான வருமானங்கள் VS IMF இலக்குகள்




மூலம்: IMF நாட்டுக்கான அறிக்கைகள் | இலங்கை மத்திய வங்கி | Publicfinance.lk

All Rig
© Verité Research 2022. Access given to participants only. Please do not circulate.

# வருமானத்தை மதிப்பிடுவதில் நிதி அமைச்சை விட COPF சிறப்பாக செயற்பட்டுள்ளது

| | 2017 Ministry of Finance Projections | 2017 COPF Observations | 2017 Projected Revenue | Over projection | | Estimation |
|---|---|---|---|---|---|---|
| | | | | Ministry of Finance | COPF | Greater Accuracy |
| ***Total revenue (incl. PCs, excl. Grants)*** | ***2,088*** | ***1,962*** | ***1,989*** | ***5.0%*** | ***-1.4%*** | **COPF** |
| ***Total revenue (excl. PCs & Grants)*** | ***2010*** | ***1,884*** | ***1,901*** | ***5.7%*** | ***-0.9%*** | **COPF** |
| **Tax revenue** | 1,821 | 1,695 | 1,749 | 4.1% | -3.1% | **COPF** |
| Income tax | 335 | 297 | 308 | 8.8% | -3.6% | **COPF** |
| Corporate tax | 158 | 132 | 150 | 5.3% | -12.0% | MoF |
| PAYE | 51 | 39 | 35 | 45.7% | 11.4% | **COPF** |
| WHT | 84 | n/a | 60 | 40.0% | n/a | n/a |
| **Taxes on goods and services** | 1,086 | 1,038 | 1,054 | 3.0% | -1.5% | **COPF** |
| VAT | 380 | 390 | 450 | -15.6% | -13.3% | **COPF** |
| Excise | 575 | 517 | 481 | 19.5% | 7.5% | **COPF** |
| Liquor | 180 | 158 | 115 | 56.5% | 37.4% | **COPF** |
| Cigarettes | 105 | n/a | 85 | 23.5% | n/a | n/a |
| Motor vehicles | 230 | 194 | 200 | 15.0% | -3.0% | **COPF** |
| Petroleum | 55 | n/a | 75 | -26.7% | n/a | n/a |
| Other | 5 | n/a | 6 | -16.7% | n/a | n/a |
| **Taxes on external trade** | 400 | 360 | 387 | 3.4% | -7.0% | MoF |
| Import & cess | 225 | 200 | 217 | 3.7% | -7.8% | MoF |
| PAL & SCL | 175 | 160 | 170 | 2.9% | -5.9% | MoF |
| **Non-Tax Revenue** | 189 | n/a | 152 | 24.3% | n/a | n/a |
| **Provincial Councils (PCs)** | 78 | n/a | 88 | -11.4% | n/a | n/a |

*மூலம்: 2018 COPF அறிக்கை 1*

All Rights Reserved © 2023
Verité Research

# 2023 க்கான பெறுமதிகளை யார் சரியாகக் குறிப்பிடுவார்கள்?

*Q1 2023*
*IMF வரி வருமான இலக்கு: ரூ. 650 பில்லியன்*
*உண்மையான வரி வருமானம்: ரூ. 578 பில்லியன்*




வெரிட்டேயின் மதிப்பீட்டில் பந்தயம் மற்றும் சூதாட்ட விதிப்பனவு உள்ளடக்கப்படவில்லை

மூலம்: ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023 | வரவு செலவுத்திட்ட அறிக்கை (வெளியிடப்படாதது) | IMF அலுவலர் அறிக்கை

All Rights Reserved © 2023
Verité Research

# *பிரச்சினை 2.2.1 : வரியில் அடிக்கடி செய்யப்படும் மாற்றங்கள்*

## வரிக் கட்டமைப்பில் அடிக்கடி முன்னெடுக்கப்படும் மாற்றங்கள் வரி அமைப்பின் நம்பகத்தன்மையைக் குறைக்கும்

*2010 – 2023 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட வரிகள்*




All Rights Reserved © 2023
Verité Research

# 2010 ஆம் ஆண்டு முதல் பெறுமதி சேர் வரி (VAT) விகிதம் ஆறு முறை திருத்தப்பட்டது




மூலம்: இலங்கை மத்திய வங்கி

All Rights Reserved © 2023
Verité Research

## 2010 முதல் தனிநபர் வருமான வரி விகிதம் 7 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன ; இவ்வாறு அடிக்கடி மாற்றப்படுவது வரி அமைப்பின் நம்பகத்தன்மையைக் குறைகிறது

தனிநபர் வருமான வரி வரம்பு –தனிநபர் வருமான வரியில் வரி செலுத்தத் தேவையற்ற வரம்பு 2020 இல் ரூ. 3,000,000 இலிருந்து 2023 இல் ரூ1,200,000 ஆகக் குறைக்கப்பட்டது




மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை

# 2022 மற்றும் 2023 இல் வரிக் கொள்கையில் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள்

## தனிநபர் வருமான வரியில் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள்

- தனிநபர் வருமான வரி விகிதங்கள் 6%,12% 18%, 24%, 30% மற்றும் 36% என அதிகரிக்கப்பட்டது
- அதிகபட்ச வருமான வரி விகிதம் 18 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக உயர்த்தப்பட்டது
- வரி செலுத்தத் தேவையற்ற வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 3 மில்லியனில் இருந்து ரூ. 1,200,000 ஆக மாற்றப்பட்டத

## VAT இல் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள்

- **VAT பதிவுசெய்வதற்கான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ.300 மில்லியனில் இருந்து ரூ,80 மில்லியானகக் குறைக்கப்பட்டது**
- **VAT விகிதம் 12 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது**
- **பல்வேறு விலக்குகள் நீக்கப்பட்டன (உதாரணம், சுற்றுலாவிற்கான VAT விலக்கு)**

## ஏனைய வரிகளில் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள்

- 2023க்குள் மதுபானம் மற்றும் புகையிலை பொருட்கள் மீதான கலால் வரி 20 சதவீதத்தால் அதிகரிப்பு

## கூட்டிணைவு வருமான வரியில் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள்

- CIT விகிமட“ 24 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்த்தப்பட்டது
- CIT விலக்குகள் நீக்கப்பட்டன

## வரிகள் இல்லாதொழிக்கப்பட்டன

- பொருளாதார சேவைக் கட்டணம் இல்லாது செய்யப்பட்டது

## அறிமுகப்படுத்தப்பட்ட / மீண்டும் கொண்டுவரப்பட்ட வரிகள்

- சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்டது
- இறுதியல்லாத WHT மற்றும் PAYE மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. APIIT க்கு பதிலாக PAYE கொண்டுவரப்பட்டது.
- WHTக்கான விலக்குகள் நீக்கப்பட்டன
- சொத்து வரி முறை 2025க்குள் சீரமைக்கப்பட்டு செல்வப் பரிமாற்ற வரியை அறிமுகப்படுத்தல்
- 2025க்குள் பரிசு மற்றும் பரம்பரை வரியை அறிமுகப்படுத்துதல்
- 2023க்குள் எரிபொருள் வரியை அறிமுகப்படுத்துதல்
- 2025க்குள் பணவீக்கத்திற்கு ஏற்ப கலால் வரிகள் தானாகவே சரிசெய்யப்படும் முறையை அறிமுகப்படுத்துத

© 2023 Verité Research. All Rights Reserved.

மூலம்: மார்ச் 2023 இலங்கைக்கான IMF அறிக்கை | CBSL

# ***2019 இலிருந்து 2021 வரையில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வரி செலுத்துனர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட 70% வீழ்ச்சி 2019 – 2021 இல் 38.3 % இழப்பை ஏற்படுத்தியுள்ளது***




*மூலம்: உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2021 மற்றும் 2022 | இலங்கை உள்நாட்டு இறைவரி, கடந்த கால கொள்கை மாற்றங்கள் http://www.ird.gov.lk/en/about%20IRD/SitePages/Policy%20Changes.aspx?menuid=110406*

All Rights Reserved © 2023
Verité Research

# அதிகரிக்கும் வரிச் சலுகைகள் வருமானச் சேகரிப்பை எதிர்மறையாகப் பாதிக்கின்றன

## அனுமதிக்கக்கூடிய விலக்குகள்

1. உள்நாட்டு இறைவரிச் சட்டம்
2. பெறுமதி சேர் வரிச் சட்டம்
3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இல. நிதி சட்டம்
4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இல. நிதி சட்டம்
5. கலால் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
6. பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்
7. பற்று வரி சட்டம்
8. சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)
9. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சட்டம்
10. துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்
11. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்
12. பந்தயம் மற்றும் சூதாட்டத் தீர்ப்பனவைச் சட்டம்

## அதிகபட்ச விலக்குக் காலம்

**25 ஆண்டுகள்**

## விலக்குக்கான ஒப்புதல்

**அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம்**

*SDP சட்டத்தின் மூலம் ஐ.அ.டொலர் 4 பில்லியனுக்கும்* அதிகமான முதலீடுகளுக்கு பல்வேறு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன*

மூலம்: 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இல. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 12 ஆம் இல. சட்டம் (திருத்தப்பட்டது), 2013 ஆம் ஆண்டின் 16 ஆம் இல. சட்டம் (திருத்தப்பட்டது)
குறிப்பு: சில வர்த்தமானி அறிவிப்புகள் முதலீடுகளின் பெறுமதியைக் கணக்கிடத் தவறியதால் SDP சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மொத்த முதலீடுகள் அறிக்கையிடப்பட்ட பெறுமதியை விட அதிகமாக இருக்கும்

© 2023 Verité Research.
All Rights Reserved.

# சலுகைகள் மூலம் இழக்கப்படும் வருமானம் கணக்கிடப்படுவதில்லை மற்றும் அறிக்கையிடப்படுவதில்லை

22.09.2022

Revenue Monitoring Unit

Information Officer (IRD),

Legal Branch.

**Order of the Right to Information Commission**

**Verite Research (Pvt) Ltd**

This refers to the letter dated 26.08.2022 on the above matter.

Inland Revenue Department does not maintain sector wise quarterly revenue data. Therefore, following sector wise annual revenue data is provided herewith.

1. Tourism Industry Revenue – Income Tax, VAT, NBT & ESC
2. Apparels and Textiles Industry Revenue – Income Tax, VAT, NBT & ESC

According to the statutory provisions, the exemptions and concessions, which were granted to the various sectors are being changed time to time. Therefore, number of companies, individuals and other entities benefiting from the exemptions and concessions cannot be identified separately.

The amount of tax revenue lost due to the said exemptions and concessions is not calculated by the Inland Revenue Department. Therefore, requested information cannot be provided.

Commissioner

Revenue Monitoring Unit

According to the statutory provisions, the exemptions and concessions, which were granted to the various sectors are being changed time to time. Therefore, number of companies, individuals and other entities benefiting from the exemptions and concessions cannot be identified separately.

The amount of tax revenue lost due to the said exemptions and concessions is not calculated by the Inland Revenue Department. Therefore, requested information cannot be provided.

வரிச் சலுகைகள் மூலம் இழந்த வருமானங்கள் குறித்து கணக்கிடப்படுவதில்லை என உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தெரியவந்துள்ளது!

All Rights Reserved © 2023
Verité Research

# *3. IMF* திட்டம் மற்றும் வருமான முன்மொழிவுகள்

All Rights Reserved © 2023
Verité Research

# *IMF கடமைப்பாடுகளில் இலங்கையின் செயல்திறன் (ஜூலை 2023 நிலவரப்படி)*




- *மார்ச் 2023க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1% (ரூ. 650 பில்லியன்) வரி வருமானத்தை  அதிகரித்தல்.*
- *இணையவழி நிதி வெளிப்படைத்தன்மை தளத்தை உருவாக்குதல்.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகளின் சொத்து தர மதிப்பாய்வை முடித்தல்.*
- *பந்தயம் மற்றும் சூதாட்டங்களுக்கான அறவீட்டை அதிகரித்தல்.*
- *முக்கிய அரச நிறுவன (SOE) மறுசீரமைப்பு திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்.*
- *அனைத்து 52 முக்கிய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் 2022 ஆண்டறிக்கைகள் வெளியிடப்படுவதை உறுதிசெய்தல்.*
- *திட்டத்தின் காலப்பகுதியில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தல்.*
- *2024 ஆம் ஆண்டிற்கான வருமான ஏற்பாடுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறுதல்.*

குறிப்பு: 'தெரியாது" எனக் குறிப்பிடப்படுவது பொதுவெளியில் சரிபார்க்கக்கூடிய தகவல்கள் கிடைக்காத கடமைப்பாடுகளைக் குறிப்பிடுகிறது. அவை பூர்த்திசெய்யப்பட்டன என்பதை மதிப்பிடுவது சவாலானது

மூலம்: *IMF* மற்றும் இலங்கை "நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை – ஊடக வெளியீடு; அலுவலர் அறிக்கை; மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை"

All Rights Reserved © 2023
Verité Research

# *IMF திட்டத்தின் நிபந்தனைகள்*

| வருமானம் சார்ந்த *IMF* திட்ட கடமைப்பாடுகள் | *Due Date* | *Status* |
|---|---|---|
| தொழில் வருமானம் (APIT/PAYE) மீது நிறுத்திவைத்தல் வரியைக் கட்டாயமாக்குதல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| சேவைக் கொடுப்பனவுகளுக்கு நிறுத்திவைத்தல் வரியை 5 சதவீதமாக விதித்தல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| பங்கிலாபங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் இறுதி அல்லாத நிறுத்திவைத்தல் வரியை மீள அறிமுகப்படுத்துதல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| பங்கிலாபங்களுக்கான இறுதியான நிறுத்திவைத்தல் வரியை அறிமுகப்படுத்துதல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| காண்டோமினியம் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பெறுமதிசேர் வரி விலக்கை அகற்றுதல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| தனிநபர் வருமான வரி முறைமை கட்டமைப்பைத் திருத்துதல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கு கலால் வரியை 20 சதவீதத்தால் அதிகரித்தல் | Jan-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| **மார்ச் 2023க்குள் வரி வருமானம் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதம் (ரூ.650 பில்லியன்)** | **Mar-23** | **பூர்த்தி செய்யப்படவில்லை** |
| **பந்தயம் மற்றும் சூதாட்டங்களுக்கான அறவீட்டை அதிகரித்தல்** | **Apr-23** | **பூர்த்தி செய்யப்படவில்லை** |
| ஜுன் 2023க்குள் மொ.உ.உற்பத்தியில் 4.3 சதவீதமாக (ரூ.1,300 பில்லியன்) வரி வருமானம் | Jun-23 | தெரியவில்லை |
| புகையிலை மற்றும் மதுபானம் மீதான கலால் தீர்வைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து மீளாய்வு | Jun-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| திட்ட வரையறைகளுக்கு ஏற்ப, 2024ம் ஆண்டில் வருமானத்தை அதிகரிக்கவும் செலவினத்தைக் குறைக்கவும் உதவும் வருமான நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் | Jun-23 | பூர்த்தி செய்யப்படவில்லை |
| செப்டெம்பர் 2023க்குள் வரி வருமானம் மொ.உ.உற்பத்தியின் 6.9 சதவீதம் (ரூ.2,100 பில்லியன்) | Sep-23 | நிலுவையில் உள்ளது |
| டிசம்பர் 2023க்குள் வரி வருமானம் மொ.உ.உற்பத்தியின் 9.7 சதவீதம் (ரூ.2,940 பில்லியன்) | Dec-23 | நிலுவையில் உள்ளது |
| பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | Dec-23 | நிலுவையில் உள்ளது |

மூலம்: IMF மற்றும் இலங்கை "நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை – ஊடக வெளியீடு; அலுவலர் அறிக்கை; மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை"

PUBLIC FINANCE .lk

# நன்றி

அடுத்த வாரம்:

வாரம் 4: அரச செலவினம்